**இலங்கை சுங்கம்**

# பெறுகை அறிவித்தல்

**(இந்த அறிவித்தல் www.customs.gov.lk என்ற இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது).**

யாழ்ப்பாண சுங்க உப தடுப்பு அலுவலகம் மற்றும் பலாலி விமான நிலையம் என்பனவற்றில் கடமையாற்றும் சுங்க அலுவலர்களின் (ஆண்/பெண்) விடுதி வசதிகளுக்காக பின்வரும் வசதிகளுடன் கூடிய மூன்று கட்டிடங்களை 2024.04.01 முதல் 2026.03.31 வரையான இரெண்டு(02) ஆண்டுக் காலப்பகுதிக்காக, மாத வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த கட்டிடங்கள் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**01.** தரை ஓடு (Tile) பதிக்கப்பட்ட தரையினையும், விதானத்தினையும் (Ceiling) கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இணைப்புக் கழிப்பறை (Attached Bathroom) வசதிகளுடன் கூடிய குளியலறை வசதிகளுடன் தரை ஓடு பதிக்கப்பட்ட கட்டிடம் ஒன்றாகவும் இருத்தல்.

**02.** அறைகள் மற்றும் மண்டபம் என்பன மின்விசிறி மற்றும் வாயு சீராக்கல் வசதிகளைக் கொண்டிருத்தல்.

**03.** மண்டபம் சாய்விருக்கை (Sofa) ஒன்றினைக் கொண்டிருத்தல்.

**04.** நீர் மற்றும் மின்சார வசதிகளைக் கொண்டிருத்தல்.

**05.** கட்டிடத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலி அல்லது சுற்றுச்சுவருடன் வாயிற் கதவுகளையும் கொண்டிருத்தல்.

**06.** விடுதிக் கட்டிடங்களில் ஒவ்வொரு அறையும் 02 கட்டில்கள், 02 புடவை இறாக்கைகள், அலுவலக மேசை மற்றும் நாற்காலி ஒவ்வொன்றினையும், அலமாரி ஒன்றினையும் கொண்டிருத்தல்.

**07.** விடுதிக் கட்டிடத்தின் சமயலறையானது, குளிர்சாதனப் பெட்டி, கேஸ் குக்கர் (Gas Cooker), (குறைந்தபட்சம் இரண்டு பேர்னர்கள்), பிளெண்டர் (Blender), மைக்ரோவேவ் ஒவன், (Microwave Oven) மின் கேத்தல் என்பனவற்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன்,கட்டிடத்திற்கு இணைப்புடன் கூடிய தொலைக் காட்சிப் பெட்டியொன்றினையும் (Television with Connection) வழங்குதல் வேண்டும். மேலும், வழங்கப்படுகின்ற உபகரணங்கள் அனைத்தும் நன்கு இயங்கு நிலையிலும் இருத்தல் வேண்டும்.

**01. யாழ்பாண சுங்க உதவித் தடுப்பு அலுவலகத்திற்கான**

- **i)** காங்கேசந்துறை பழைய துறைமுகத்திலிருந்து 05 கி.மீ. தூரத்திற்குள் அல்லது அதற்கு அருகாமையில், பிரதான பாதையினை முன்னோக்கியதாக அமையப்பெற்றிருத்தல்.
- **ii)** 2500-3000 சதுர அடி இட வசதிகளுடன் கூடிய 05 அறைகளைக் கொண்டிருத்தல்.
- **iii)** குறைந்த பட்சம் 04 வாகனங்களை நிறுத்திவைக்க முடியுமான வகையில் கொங்கிறீற்று பதிக்கப்பட்ட தரையினைக் கொண்டிருத்தல்.
- **iv)** 03 கழிப்பறைகள் மற்றும் குளியலறைகளை கொண்டிருத்தல்.
- **v)** மூன்று அறைகளுக்குப் போதுமான குளிரூட்டி வசதிகள் மற்றும் தொலைபேசி மற்றும் இணைய வசதிகளுக்கு தேவையான வயரிங் வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.
- **vi)** தடுத்துவைத்தற் கூடம் **( A Cell)**
- **vii)** சேமக்காப்பறை **(A Strong Room)**

**02. பலாலி விமான நிலையத்தில் கடமையாற்றுகின்ற சுங்க அலுவலர்களின் (ஆண்) விடுதி வசதிகளுக்கான கட்டிடம்**

- **i)** 06 அறைகளைக் கொண்ட விடுதிக் கட்டிடமொன்றாக இருத்தல்.
- **ii)** பலாலி விமான நிலையத்திலிருந்து 20 கி.மீ. தூரத்திற்குள் அல்லது அதற்கு அருகாமையில், பிரதான பாதையை முன்னோக்கியதாக, குடியிருப்புப் பகுதியொன்றில் அமையப் பெற்றிருத்தல்.
- **iii)** குறைந்த பட்சம் 06 வாகனங்களை நிறுத்திவைக்க முடியுமான வகையில் கொங்கிறீற்று பதிக்கப்பட்ட தரையினைக் கொண்டிருத்தல்.

**03. பலாலி விமான நிலையத்தில் கடமையாற்றுகின்ற சுங்க அலுவலர்களின் (பெண்) விடுதி வசதிகளுக்கான கட்டிடம்**

- **i)** 03 அறைகளைக் கொண்ட விடுதிக் கட்டிடமொன்றாக இருத்தல்.
- **ii)** பலாலி விமான நிலையத்திலிருந்து 10 கி.மீ. தூரத்திற்குள் அல்லது அதற்கு அருகாமையில், பிரதான பாதையை முன்னோக்கியதாக, குடியிருப்புப் பகுதியொன்றில் அமையப் பெற்றிருத்தல்.
- **iii)** குறைந்த பட்சம் 05 வாகனங்களை நிறுத்திவைக்க முடியுமான வகையில் கொங்கிறீற்று பதிக்கப்பட்ட தரையினைக் கொண்டிருத்தல்.

**நிபந்தனைகள்**

1) விலைமனு சமர்பிக்கப்படுகின்ற காணி மற்றும் கட்டிடம் என்பன ஏதும் சர்ச்சைக்கு அல்லது நீதிமன்ற செயல்முறைக்கு உட்படாதிருத்தல்.

2) விலைமனுவுடன் பின்வரும் ஆவணங்கள்/ தகவல்கள் என்பனவும் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

- I. கட்டிடத்தின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கான ஒப்பாவணத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றினை அல்லது விலைமனு சமர்ப்பிப்பவர் குறித்த காணியின் அல்லது கட்டிடத்தின் உரிமையாளர் அல்லாதவிடத்து, துணை குத்தகை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடு காணப்படுகின்ற குத்தகைப் ஒப்பந்தத்தின் பிரதியொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
- II. காணியின் வரைபடம்
- III. கட்டிட வரைபடம்
- IV. கட்டிட அபிவிருத்திக்காக மாகாண சபையினால் வழங்கப்பட்ட அங்கீகாரம்
- V. கட்டிடத்தில் காணப்படுகின்ற வசதிகள்
- VI. மாத வாடகை (ரூபா)
- VII. வீட்டு உபயோகப் பொருட் பட்டியல்
- VIII. கிட்டிய முன் மாதத்திற்காக தீர்த்துவைக்கப்பட்ட பொதுப் பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல்களின் பிரதிகள்
- IX. ஏனையவை( விபரமாக குறிப்பிடவும்)

**02.** ஒப்பந்தக் காலவரையறைக்குரிய நீர் மற்றும் மின்சாரம் உள்ளடங்கலாக பொதுப் பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல்கள் இலங்கை சுங்கத்தால் தீர்த்துவைக்கப்படும்.

**03.** குத்தகைதாரரினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு செலுத்த வேண்டியுள்ள சோலை வரிகள் போன்ற வரிகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்'டும்.

**04.** ஒப்பந்தம் வழங்கப்பட்ட 21 நாட்களுக்குள் வாடகை/குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கான அனைத்து செலவுகளையும் குத்தகைதாரரே பெறுப்பேற்க வேண்டும்.

**05.** ஒப்பந்தக் காலப் பகுதியில் கட்டிடம் மற்றும் வாகனத் தரிப்பிடம் என்பனவற்றிற்கான பயன்பாட்டுரிமையினை இலங்கை சுங்கம் கொண்டிருக்கும். இருப்பினும், கட்டிடம் மற்றும் வாகன தரிப்பிடம் தவிர்ந்த நிலப் பரப்பினை சிறந்த முறையில் பேணிப் பராமரிப்பது குத்தகைதாரரின் பொறுப்பாக அமைதல் வேண்டும்.

**06.** ஒப்பந்தக் காலப் பகுதியில் ரூபா 25000/- இற்கு மேற்படாத பழுதுபார்ப்பு பணிகள் இலங்கை சுங்கத்தால் மேற்கொள்ளப்படும். ஆயினும், ரூபா 25000/- இற்கு மேற்படுகின்ற பழுதுபார்ப்புக்கள் குத்தகைதாரரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**07.** நீங்கள் சமர்ப்பிக்கும் விலைமனுக்கள் உள்ளடங்கிய, முத்திரையிடப்பட்ட உறையின் இடது மேல் மூலையில், யாழ்ப்பாண சுங்க உப தடுப்பு அலுவலகம், பலாலி விமான நிலைய சுங்க விடுதி (ஆண்கள்) மற்றும் பலாலி விமான நிலைய சுங்க விடுதி (பெண்கள்) என்பனவற்றில் நீங்கள் விலைமனுக்களை எந்த விடயத்திற்காக சமர்ப்பிக்கிறீர்கள் என்பதை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**08.** இப்பெறுகையினை மூன்று (03) பெறுகைகளாகக் கருதி, நடவடிக்கை எடுக்கப்படுவதன் காரணமாக ஒன்றுக்கு மேற்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படுமாயின், அவற்றினைத் தனித்தனி உறைகளில் இட்டு, மேலே இல. 07 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய, சமர்ப்பித்தல் வேண்டும்.

**09.** முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடப்பட்டுள்ள விலைமனுக்களை, சுங்கப் பணிப்பாளர், சேவை வழங்கல் பணிப்பகம், 6 ஆம் மாடி, சுங்க இல்லம், இல.40, பிரதான வீதி, கொழும்பு 11 என்ற முகவரிக்கு **2024.03.04** ஆம் திகதி **பி.ப. 2.00** மணிக்கு முன்னர் கிடைக்கப் பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறின்றேல், சுங்க இல்லத்தின் 6 ஆம் மாடியில் அமையப்பெற்றுள்ள சேவை வழங்கல் பணிப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும்.

**10.** விலைமனுக்களை ஏற்பதற்கான காலம் முடிவடைந்ததுடன், அவை உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன், இதன்போது கட்டிட உரிமையாளர் அல்லது அவர் சார்பில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவரும் பங்கேற்கலாம்.

**11.** விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட கட்டிடங்களின் பொருத்தப்பாடானது, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள்/ பணிப்பாளர் (சேவை வழங்கல்) அல்லது சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (சேவை வழங்கல்) ஆகியோரின் கள ஆய்வின் பின்னர் தீர்மானிக்கப்படும்.

**12.** சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிப்பது தொடர்பிலான முழு அதிகாரமும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினைச் சார்ந்துள்ளது.

**13.** மேலதிக விபரங்களை 011- 2221680 என்ற இலக்கத்திலுள்ள சுங்கப் பணிப்பாளரினை (சேவை வழங்கல்) தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**திணைக்களம் சார் பாரியளவிலான பெறுகைக் குழு,**
**இலங்கை சுங்கத் திணைக்களம்,**
**சுங்கத் தலைமைக் கட்டிடம்,**
**இல. 40, பிரதான வீதி,**

கொழும்பு 11.